[2002 ஏப்ரல் 17

141—

விளையாட்டுத் திடல்

***403—திரு. எஸ். மகாலிங்கம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவிநாசி தொகுதியில், இளைஞர்களுக்கான விளையாட்டுத் திடல் அமைக்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவிநாசி தொகுதியில் இந்த நடப்பாண்டில் இளைஞர்களுக்கான விளையாட்டுத் திடல் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். எட்டுத்திக்கும் புகழ்பெற்று இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக விளங்கிக்கொண்டிருக்கும் எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நோக்கிச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த நமது கழக ஆட்சியில்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடி கவனத்தின் மூலமாக சென்னையில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு மைதானங்கள் பல கட்டப்பட்டு தமிழகத்தில் உலக மற்றும் இந்திய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதை நன்கு அறிவோம் என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்கு நினைவூட்டி விட்டு, விளையாட்டுத் துறையில் புதிய உத்வேகம் கொடுக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் அவிநாசி தொகுதியில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த நடப்பு நிதியாண்டில் அரசு மூலம் விளையாட்டுத் திடல் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2002 ஏப்ரல் 17]

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் சுமார் 30க்கும் மேல் நிறுவப்பட்டு இருக்கின்றன. இவற்றில் 10 மையங்கள்தான் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மற்ற மையங்கள் எல்லாம் அங்கு இருக்கும் இளைஞர்கள் சரியான முறையில் இன்னும் பயன்படுத்தாத நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றன. அதோடு அவிநாசி தொகுதியை உள்ளடக்கிய கோவையில் ஒரு வெளி விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு உள்ளது. அந்த விளையாட்டு அரங்கில் 8 தடகள பாதையுடன் கொண்ட 400 மீட்டர் தடகள ஓடுபாதையும், கால் பந்தாட்ட மைதானமும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இதில் மாணவர்கள் மட்டுமல்லாது, மற்றவர்களும்—இளைஞர்களும் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற வழிமுறையும் இருக்கிறது. ஆகவே முன்பு அமைக்கப்பட்டுள்ள இந்த வசதிகளையெல்லாம் பயன்படுத்தி இளைஞர்கள் தங்களுடைய விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இருக்கின்ற நிதி நிலை காரணமாக புதியதாக எதுவும் அமைக்கும் நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில், கைப்பந்து போட்டிகளும், கபடி போட்டிகளும் திருப்பூரில் ஆண்டுதோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வருகின்ற 28 ஆம் தேதி கூட அகில இந்திய அளவில் கைப்பந்துப் போட்டி திருப்பூரில் தொடங்கப்பட இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு அதுமாதிரி போட்டிகளை நடத்துவதற்காக 10 இலட்சம் ரூபாய் முதல் 15 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து தற்காலிக Stadium அமைக்க வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய விளையாட்டுக் கழகங்கள் சார்பாக ஒரு புதிய Stadium அமைக்கின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த புதிய Stadium அமைப்பதற்கு அரசு, தக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியைப்பற்றித்தான் இப்போது கேள்வி, அவர் திருப்பூர் தொகுதியைப்பற்றிய கேள்வியைக் கேட்கின்றார். தனிக் கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிவபுண்ணியம், இது அவிநாசி தொகுதிபற்றிய கேள்வி, உங்களுக்கே மனசாட்சி உறுத்துகிறதுபோல் இருக்கிறது, விட்டுவிடுங்கள்.

வினா எண் 142, திரு. என். ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

மேல்நிலைப் பள்ளி

***16256—திரு. என். ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், தில்லையாடி அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் 2002-2003 இல் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தில்லையாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு இதுவரையில் எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் அரசினுடைய நிதி நிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ரங்கநாதன்.

திரு. என். ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகிறேன். தமிழ்த் தாயை வணங்குகிறேன்.